

வேலூர் மாநகராட்சி 12வது வார்டு எம்ஜிஆர் நகரில் ரூ.25 லட்சத்தில் புதிதாக அமைத்த சிமெண்ட் சாலையை வேலூர் மாநகராட்சி துணை மேயர் சுனில்குமார் திறந்து வைத்து அருகில் மரக்கன்று நட்டார்.

தேவைக்கான தண்ணீர் இன்றி அவதிப்படுகின்றனர். அருகே உள்ள தெருக்களுக்கு தண்ணீர் எடுக்கச் சென்றால், எங்களுக்கே தண்ணீர் பற்றாக்குறை உள்ளது என வாக்குவாதம் ஏற்படுகிறது. எனவே தண்ணீர் தட்டுப்பாட்டை போக்க 2 ஆழ்துளை கிணறுகளை சீரமைத்து விரைந்து சரி செய்து கொடுக்க வேண்டும்.

– சேகர்பாபு, தொரப்பாடி.



...ள்ள 'நம்ம காட்பாடி' ...ந்து பேனர்களால் ... மாநகராட்சி நிர்வாகம் ...கொண்டிருக்கிறது.

## கிணற்றில் விழுந்த நாய் மீட்பு

**வேலூர், மே 25–**

வேலூர் மூஞ்சூர் பட்டைச் சேர்ந்தவர் அர்ஜுனன். விவசாயி. இவர் தனது நிலத்திற்கு நேற்று அதிகாலை வயலுக்கு தண்ணீர் பாய்ச்ச சென்றார். அப்போது நிலத்தில் உள்ள கிணற்றில் இருந்து நாய் குரைக்கும் சத்தம் கேட்டது. உள்ளே எட்டிப் பார்த்தபோது, கிணற்றுக்குள் விழுந்த நாய் ஒன்று தண்ணீரில் தத்தளித்துக்கொண்டிருந்தது. இதுகுறித்து அவர் வேலூர் தீயணைப்பு நிலையத்துக்கு தகவல் தெரிவித்தார். நிலைய அலுவலர் காரல் மார்ஸ் தலைமையில் தீயணைப்பு வீரர்கள் விரைந்து வந்து கயிறு கட்டி கிணற்றில் இறங்கி நாயை உயிருடன் மீட்டனர்.




புதுடில்லியில் நடந்த அறிவியல் ஒலிம்பியாட் அறக்கட்டளையின் 28வது சர்வதேச ஆண்டு விருது வழங்கும் விழாவில் சுப்ரீம் கோர்ட் நீதிபதி விஜய் பிஷ்னோய், காட்பாடி சிருஷ்டி பள்ளி முதல்வர் சரவணனுக்கு சர்வதேச சிறந்த பள்ளி முதல்வர் விருதினை வழங்கி கவுரவித்தார்.

## ...டருக்கு ... ஓவியம்



...ஸ்கடர் நினைவு நாளை முன்னிட்டு சாம்பிலால் ...ன அவரது உருவ படம்.

...டந்தாண்டு ஐடா ...ரின் 155ம் ஆண்டு ...த நாளை முன்னிட்டு அ...ரது உருவத்தை 652 கா...யான மருந்துக்குப்பிக...ளை (கேப்சூல்கள்) ...ண்டு ஓவியம் வரைந்த...து குறிப்பிடத்தக்கது.

## சிருஷ்டி பள்ளி முதல்வருக்கு சர்வதேச விருது வழங்கல்

**வேலூர், மே 25–**

அறிவியல் ஒலிம்பியாட் அறக்கட்டளையானது (எஸ்ஓஎப்), உலகம் முழுவதும் அமைந்திருக்கும் பள்ளிகளில் கல்வித் திறன் மேம்பாட்டுக்காக ஒலிம்பியாட் தேர்வுகளை நடத்தும் புகழ்பெற்ற கல்வி அமைப்பாக விளங்கி வருகிறது.

இந்த அறிவியல் ஒலிம்பியாட் அறக்கட்டளையின் 28வது சர்வதேச ஆண்டு விருது வழங்கும் விழா டில்லி அம்பேத்கர் சர்வதேச மையத்தில் நடந்தது. விழாவில் சிறப்பு விருந்தினராக சுப்ரீம் கோர்ட் நீதிபதி விஜய் பிஷ்னோய் பங்கேற்று, கல்வி தலைமைத்துவம், புதுமை மற்றும் பள்ளி நிர்வாகத்தில் சிறந்த பங்களிப்பு ஆகியவற்றை வழங்கியதை அங்கீகரிக்கும் வகையில், வேலூர் மாவட்டம் காட்பாடி சிருஷ்டி பள்ளி முதல்வர் சரவணனுக்கு சர்வதேச சிறந்த முதல்வர் விருதினை வழங்கி பாராட்டினார்.

அப்போது சிருஷ்டி பள்ளி முதல்வர் சரவணன் பேசும்போது, ''இந்த சாதனைக்கு துணைநின்ற மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் பள்ளி நிர்வாகத்துக்கு நன்றியை தெரிவித்தார். அதோடு, இந்த அங்கீகாரம் முழுவதும் பள்ளி குடும்பத்துக்கு உரித்தானது'' என்று குறிப்பிட்டார்.

விழாவில், சிபிஎஸ்இ செயலாளர் ஹிமான்ஷு குப்தா, இஸ்ரோ முன்னாள் விஞ்ஞானி ராஜன், பிரபல கல்வியாளரும் நரம்பியல் நிபுணருமான டாக்டர் பிரவீன் குப்தா உள்ளிட்ட பல முக்கிய பிரமுகர்கள் பங்கேற்றனர்.

## மாம்பழங்கள் வரத்து அதிகம் விலை குறைவு

**வேலூர், மே 25–**

வேலூர் மாவட்டத்தில் மாம்பழங்கள் ஆங்காங்கே விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளது. குறிப்பாக, மாங்காய் மண்டியில் இருந்து வாங்கிச் செல்லும் மாம்பழங்கள் தெருக்கடைகள், தள்ளுவண்டிகள், பழக்கடைகள் என விற்பனைக்கு வைக்கப்பட்டிருக்கும்.

இந்நிலையில், வரத்து அதிகரிப்பால் மாம்பழம் விலை நேற்று சற்று குறைந்து காணப்பட்டது. அதன்படி, இமாம் பசந்த்– ரூ. 40 முதல் 80 வரையும், செந்துாரா – ரூ. 6 முதல் 15 வரையும், பங்கனப்பள்ளி–ரூ.10 முதல் 30 வரையும், அல்போன்ஸா–18 முதல் 30 வரையும் குறைவான விலையில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

இதுகுறித்து, மாம்பழ வியாபாரிகள் கூறுகையில், மாம்பழம் வரத்து அதிகரித்துள்ளதால் விலை சற்று குறைந்துள்ளது. அதுமட்டுமின்றி, பெரும்பாலான ஜூஸ் தயாரிக்கும் நிறுவனங்கள் வாங்கவில்லை. மேலும், அமெரிக்க–ஈரான் போர் ஒரு காரணமாக உள்ளது. இதன் காரணமாகவே மாம்பழத்தின் விலை குறைந்துள்ளது. இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.



...மண்டியில் வாங்க ஆட்கள் வராததால் ...மாங்காய். இதனால் பெரும் நஷ்டத்தை ...கின்றனர் வியாபாரிகள், விவசாயிகள்.

## 1.5 கிலோ கஞ்சா பறிமுதல்

**வேலூர், மே 25–**

காட்பாடி ரயில்வே ஸ்டேஷன் வழியாக ரயிலில் கஞ்சா கடத்தி வரப்படுவதாக வேலூர் போதைப்பொருள் தடுப்பு போலீசாருக்கு தகவல் கிடைத்தது.

சப் இன்ஸ்பெக்டர் சிலம்பரசன் தலைமையிலான போலீசார் காட்பாடி ரயில்வே ஸ்டேஷன் 1வது பிளாட்பாரத்தில் நின்ற சென்னை– கன்னியாகுமரி செல்லும் விவேக் எக்ஸ்பிரஸ் ரயிலில் சோதனை நடத்தினர்.

அப்போது பொதுப் பெட்டியில் கேட்பாரற்று கிடந்த பையை சோதனை செய்ததில் 1.5 கிலோ கஞ்சா கடத்தி வரப்பட்டது தெரியவந்தது. போலீசார் கஞ்சாவை பறிமுதல் செய்து கடத்தி வந்த மர்ம நபரை தேடி வருகின்றனர்.

## சட்டமன்ற தேர்தல் பாதுகாப்பு பணியில் முன்னாள் படைவீரர்கள்

### கலெக்டர் தகவல்

வேலூர், மார்ச்.19-

தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் பாதுகாப்பு பணியில் முன்னாள் படைவீரர்கள் ஈடுபடுத்தப்பட உள்ளனர். அதன்படி வேலூர் மாவட்டத்தை சேர்ந்த 65 வயதுக்கு உட்பட்ட விருப்பமுள்ள இளநிலை படை அலுவலர்கள் மற்றும் முன்னாள் படை வீரர்கள் ஒருங்கிணைந்த வேலூர் மாவட்ட முன்னாள் படை வீரர்கள் நல அலுவலகத்தை நேரில் அணுகி அல்லது தொலைபேசி மூலம் தங்களின் விருப்பத்தை தெரிவிக்கலாம். பொதுமக்களின் நலன்கருதி முன்னாள் படைவீரர்கள் தேர்தல் பாதுகாப்பு பணியை மேற்கொள்ள வேண்டும்.

இந்த தகவலை வேலூர் மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலரும், கலெக்டருமான சுப்புலெட்சுமி தெரிவித்துள்ளார்.



காட்பாடி

## சிருஷ்டி பள்ளி-வி.ஐ.டி. பல்கலைக்கழகம் புரிந்துணர்வு ஒப்பந்தம்

காட்பாடி, மார்ச்.19-

காட்பாடி சிருஷ்டி வித்யாஷ்ரம் சீனியர் செகண்டரி பள்ளி, வி.ஐ.டி. பல்கலைக்கழகத்துடன் இணைந்து கல்வி, புது முயற்சிகள் மற்றும் திறன் மேம்பாடு செயல்பாடுகளை வலுப்படுத்தும் வகையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டது.

நிகழ்ச்சியில் வி.ஐ.டி. துணை வேந்தர் காஞ்சனா பாஸ்கரன், சிருஷ்டி பள்ளிகளின் குழும தலைவர் எம்.எஸ்.சரவணன் ஆகியோர் மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் சிறப்பான கல்வி அனுபவத்தை வழங்கும் வகையில் இரு கல்வி நிறுவனங்களுக்கு இடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தத்தை செய்து கொண்டனர். விசைன் மற்றும் விஸ்மார்ட் டீன் அருண் டாம் மேத்யூ, சிருஷ்டி மெட்ரிக் பள்ளி முதல்வர் திங்கள் ஜான்சன், சிருஷ்டி வித்யாஷ்ரம் சீனியர் செகண்டரி பள்ளி துணை முதல்வர் ஹெப்சிபா, பள்ளியின் திறன் மேம்பாடு மற்றும் புதுமை பிரிவு ஒருங்கிணைப்பாளர் பிரேம் ஆனந்த் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இது குறித்து சிருஷ்டி பள்ளிகளின் குழும தலைவர் எம்.எஸ்.சரவணன் கூறுகையில், "இந்த ஒப்பந்தம் மூலம், பள்ளியில் புதுமை சூழலை வளர்த்தெடுப்பதோடு, ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் எதிர்கால ஆண்டுகளில் கல்வி வளமும் திறனும் மேம்படும். இரு கல்வி நிறுவனங்களும் இணைந்து பயிற்சி முகாம்கள், கருத்தரங்குகள், வழிகாட்டும் நிகழ்ச்சிகள் நடத்த உள்ளன. இத்தகைய முயற்சிகள், பள்ளிக் கல்வி மற்றும் உயர்கல்விக்கு இடையிலான இணைப்பை மேலும் வலுப்படுத்தும்" என்றார்.

கே.வி.குப்பம், பேரணாம்பட்டு பகுதிகளில்

## தேர்தல் பார்வையாளர் ஆய்வு

கே.வி.குப்பம், மார்ச்.19-

கே.வி.குப்பம் தாலுகா வடுகந்தாங்கல் உள்வட்டம் தொண்டன்துளசி கிராமத்தில் கே.வி.குப்பம் சட்டமன்ற தொகுதி தேர்தல் பொதுப் பார்வையாளர் ஸ்ரீமன்சுக்லா தேர்தல் தொடர்பாக பொதுமக்களிடம் விசாரணை நடத்தினார். தேர்தல் நடத்தும் அலுவலர் சரவணன், உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் கி.பலராமன் ஆகியோர் உடனிருந்தனர்.

அதே போன்று பேரணாம்பட்டு நகரில் இஸ்லாமிய மேல்நிலைப்பள்ளி வாக்குச்சாவடி மையத்தை தேர்தல் பார்வை



வேலூர் வடக்கு மாவட்ட

## தி.மு.க. செயற்குழு கூட்டம்

### கதிர் ஆனந்த் எம்.பி. பங்கேற்பு

வேலூர், மார்ச்.19-

வேலூர் வடக்கு மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழு கூட்டம் மாவட்ட பொருளாளர் சி.நரசிம்மன் தலைமையில் நடந்தது. வடக்கு மாவட்ட பொறுப்பாளர் டி.எம்.கதிர் ஆனந்த் எம்.பி. முன்னிலை வகித்தார். கூட்டத்தில் தமிழ்நாடு தலைகுனியாது பரப்புரை முன்னெடுப்பை வெற்றிகரமாக மேற்கொள்வது, 200 தொகுதிகளுக்கும் மேலான வெற்றியை பெறவேண்டும் என்ற உத்தரவை மனதில் கொண்டு காட்பாடி மற்றும் கே.வி.குப்பம் தொகுதிகளில் இமாலய வெற்றியை அ...
பட ே...
களப்பண...
சிக்கப்பட...
கே.வ...
பொறுப்...
மாநில, ...
பகுதி, பே...
மற்றும் நி...
செயற்கு...
உறுப்பின...
மாவட்ட
மற்றும் ப...
டனர்.

பள்ளி கல்வித்துறையில் வேலை வாங்கி தரு...

## ஆட்டோ டிரைவரிடம் ரூ.13¾ லட்ச...

## அரசுப்பள்ளி ஆய்வக உதவியாளர் கைது

வேலூர், மார்ச்.19-

பள்ளி கல்வித்துறையில் வேலை வாங்கி தருவதாக கூறி ஆட்டோ டிரைவரிடம் ரூ.13¾ லட்சம் மோசடி செய்த அரசுப்பள்ளி ஆய்வக உதவியாளர் கைது செய்யப்பட்டார்.

### பள்ளி கல்வித்துறையில் வேலை

வேலூர் மாவட்டம் குடியாத்தம் தாலுகா அம்மணாங்குப்பம் பெரியார் நகரை சேர்ந்தவர் விஷ்ணுபிரசாத் (வயது 33), ஆட்டோ டிரைவர். மலையடிவாரத்தை சேர்ந்தவர் கார்த்திக் (39). இவர் பேரணாம்பட்டு தாலுகா காக்களூர் அரசு மேல்நிலைப்பள்ளியில் ஆய்வக உதவியாளராக பணிபுரிந்து வந்தார்.

கார்த்திக் பள்ளிக்கல்வி துறையில் ...



கார்த்திக்

...யில் சேர முயன்றபோது அது போலி பணி நியமன ஆணை என்பது தெரியவந்தது.

இதனால் அதிர்ச்சி அடைந்த விஷ்ணுபிரசாத் இதுபற்றி கார்த்திக்கிடம் கேட்டதற்கு சில மாதங்களில் பணி நியமன ஆணை வந்து விடும் என்று கூறி சமாதானப்படுத்தி உள்ளார். ஆனால் 3 ஆண்டுகள் ஆகியும் வேலை வாங்கி ...

ஆய்வ...
இதுகு...
சாத் ...
போலீஸ்...
வலகத்தி...
அதன்பே...
றப்பிரிவ...
பெக்டர்...
திவு செ...
தினார்...
துறையி...
தருவதா...
சடி செ...
இதைய...
அவரை...
இதுப...
கையில்...
வித்துறை...
தருவத...
சாத், அ...
குடியா...
18 பேரிட...
மோசடி...
கட்ட ...
வந்துள்...
கொடு...
குறித்து...
ரணை ...
கார்த்...

# வேலூர் மாவட்ட செய்திகள்



பென்னாத்தூர் பேரூராட்சியில்

## ரூ.2¼ லட்சத்துக்கு காய்கறி சந்தை ஏலம்

அடுக்கம்பாறை, ஏப்.18-

பென்னாத்தூர் பேரூராட்சியில் வாரந்தோறும் புதன்கிழமை நடைபெறும் வாரச்சந்தையில் காய்கறிகளை வாங்குவதற்கும் விற்பதற்கும் ஏராளமான மக்கள் வந்து செல்கின்றனர். இந்த சந்தையில் விற்பனை செய்யும் வியாபாரிகளிடம் இருந்து சுங்க கட்டணம் வசூலிப்பதற்கான உரிமை ஏலம் 3 ஆண்டுக ளுக்கு ஒருமுறை நடைபெற்று வருகிறது. அதன்படி 2025- 2028-ம் ஆண்டிற்கான வாரச்சந்தை ஏலம் பேரூராட்சி அலு வலகத்தில்4 முறை நடத்தப்பட்டு பல்வேறு காரணங்களால் ஒத்திவைக்கப்பட்டது.

தொடர்ந்து 5-வது முறையாக நேற்று மீண்டும் ஏலம் நடந் தது. பேரூராட்சி தலைவர் பவானி சசிகுமார் தலைமை தாங்கினார். துணைத்தலைவர் ஜீவசத்தியராஜ் முன்னிலை வகித்தார். செயல் அலுவலர் குருசாமி ஏலத்தை நடத்தினார்.

ரூ.2 லட்சத்து 36 ஆயிரத்து 500-க்கு ஏலம் கேட்ட அதே ஊரை சேர்ந்த சுப்பிரமணியன் என்பவருக்கு ஏலம் விடப் பட்டது. மேலும் ஏலம் எடுத்தவர் அதற்கான 18 சதவீதம் வரியுடன் சேர்த்து ரூ.2 லட்சத்து 81 ஆயிரத்து 570-ஐ கட்ட வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டு தொகைபெறப்பட்டது.

மார்ச் மாதத்தோடு ஏலத்திற்கான காலக்கெடு முடிந்தும் ஏலம் முடிவுக்கு வராததால் கடந்த 3 வாரமாக செயல் அலு வலர் தலைமையில் பேரூராட்சி பணியாளர்கள் சுங்க கட்ட ணம் வசூலிக்கும் பணியில் ஈடுபட்டனர் என்பது குறிப்பிடத் தக்கது.




## சிருஷ்டி மெட்ரிக் பள்ளி ஆண்டு விழா


### பொதுத்தேர்வில் சிறப்பிடம் பெற்ற மாணவர்களுக்கு பரிசு

காட்பாடி, ஏப்.18-

சிருஷ்டி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி பள்ளி ஆண்டு விழா நடந்தது. மகிஜா பவுண்டேசன் அறக்கட்டளையின் அறங் காவலர் மகாதேவன் வெங்கடேசன் தலைமை தாங்கினார். சிருஷ்டி பள்ளிகளின் குழுமத் தலைவர் எம்.எஸ்.சரவணன், மெட்ரிக் பள்ளி முதல்வர் திங்கள் ஜான்சன், துணை முதல்வர் ஜாய்ஸ் ஜெயகுமாரி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

சிறப்பு விருந்தினராக உதவி பேராசிரியை சாத்தம்மைப் பிரியா கலந்து கொண்டு பேசினார். 10, 11, 12-ம் வகுப்பு பொதுத்தேர்வில் பள்ளி அளவில் முதல் 3 இடங்கள் பெற்ற மாணவர்களை பாராட்டி பரிசுகள், 10 மற்றும் 12-ம் வகுப்பு மாணவ, மாணவிகளுக்கு பள்ளி நிறைவு சான்றிதழ்கள், போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசு மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. ஸ்ரீமனு மகிஜா நினைவு சிருஷ்டி மெட்ரிக் பள்ளியில் பொதுத்தேர்வில் பள்ளி அள வில் 3 இடங்கள் பெற்ற மாணவிகளுக்கு பாராட்டு மற்றும் பரிசுகள், 10-ம் வகுப்பு மாணவிகளுக்கு பள்ளி நிறைவு சான் றிதழ்கள் வழங்கப்பட்டன.

## இனிப்பு வழங்கி கொண்டாட்டம்





வேலூர் மாநகராட்சி அவசர கூட்டம் மேயர் சுஜாதா தலைமையில் நடைபெற்றபே எடுத்த படம். அருகில் துணைமேயர் சுனில்குமார், கமிஷனர் ஜானகி உள்ளனர்.

## அரசு புறம்போக்கு இடத்தில் வசிக்கு 579 பேருக்கு இலவச வீட்டு மனை பட்ட

### மாநகராட்சி கூட்டத்தில் தீர்மானம்

வேலூர், ஏப்.18-

வேலூர் மாநகராட்சியை யொட்டி அரசு புறம் போக்கு இடத்தில் 5 ஆண்டுகளுக்கு மேலாக வீடு கட்டி வசிக்கும் 579 பேருக்கு இலவச வீட்டு மனை பட்டா வழங்க அனுமதிப்பது என்று மாநகராட்சி கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

#### அவசர கூட்டம்

வேலூர் மாநகராட்சி அவ சர கூட்டம் மாநகராட்சி அலுவலக கூட்டரங்கில் நேற்று நடந்தது. துணைமேயர் சுனில்குமார், மாநகராட்சி கமிஷனர் ஜானகி ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட் டத்துக்கு மேயர் சுஜாதா தலைமை தாங்கி பேசுகை யில், தமிழகத்தில் உள்ளாட்சி அமைப்புகளில் மாற்றுத்திற னாளிகளுக்கு பிரதிநிதித்து வம் அளிக்கும் விதமாக முதல்-அமைச்சர் மு.க.ஸ்டா லின் சட்டசபையில் நக ராட்சி மற்றும் ஊராட்சி அமைப்புகளில் மாற்றுத்திற னாளிகள் போட்டியிடாமல் நேரடியாக உறுப்பினராக நியமிக்கும் சட்டமசோ தாவை அறிமுகம் செய்து சாதனை படைத்துள்ளார். இதற்கு வேலூர் மாநகர மக் கள் மற்றும் வேலூர் மாமன் றம் சார்பில் நன்றியை தெரி வித்து கொள்கிறேன்.

இந்த கூட்டத்தில் இலவச வீட் டுமனை பட்டா வழங்குவது தொடர்பான தீர்மானங்கள் நிறைவேற்றப்படுகிறது. எனவே கவுன்சிலர்கள் தங்கள் வார்டில் உள்ள குறைகள் மற்றும் கோரிக் கைகள் குறித்து அடுத்த கூட்டத் தில் பேசி அதற்கு தீர்வு காண லாம் என்றார்.

#### இலவச வீட்டுமனை பட்டா

கூட்டத்தில், காட்பாடி தாலுகாவிற்கு உட்பட்ட வேலூர் மாநகராட்சிமையத் தில் இருந்து 16 கிலோமீட்டர் சுற்றளவில் உள்ள உள்ளாட் சியில் அரசு புறம்போக்கு இடத்தில் 5 ஆண்டுகளுக்காக மேலாக வீடு கட்டி குடியி ருந்து வரும் நபர்களின் ஆக் கிரமிப்புகளை வரன்முறைப் படுத்தும் சிறப்பு திட்டத்தின் படி கல்புதூர், பாறை காந்திநகர், எம்.ஜி.ஆர். களத்துமேடு உள்ளிட்ட திகளில் வசிக்கும் 262 பே இலவச வீட்டுமனை ப வழங்க அனுமதி அ பட்டது.

அதேபோன்று வேலூ டத்துக்கு உட்பட்ட ராட்சி மையம் மற்றும் மாநகராட்சி மைய இருந்து 16 கிலோ மீட் றளவில் உள்ள வேலூ ணாங்குட்டை, ராஜீவ் கர், குளவிமேடு, கா கே.கே.நகர். அவ்வை வள்ளுவர்நகர், வசந்த மாகாலனி, கே.கே.ந ளிட்ட பல்வேறு இட அரசு புறம்போக்கு 5 ஆண்டுகளுக்கு மே வரும் 317 பேர் என்று 579 பேருக்கு இலவ மனை பட்டா வழ மதி அளிப்பது என் னங்கள் நிறைவேற் இதில் கவுன்சிலர் ராட்சி அலுவலர்க பலர் கலந்து கொ அவசர கூட்டத்தி னங்கள் மட்டும் நி பட்டதால் கூட் கிய 5 நிமிடங்களி டம் நிறைவு பெற்ற

பள்ளிகொண்டா பேரூராட்சியில்

## உங்களைத் தேடி உங்கள் ஊ திட்டத்தில் கலெக்டர் ஆ

அணைக்கட்டு, ஏப்.18-

பள்ளிகொண்டா பேரு ராட்சியில் உங்களைத்